நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## DVC. No. 2/2017

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்திரா |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | SBI பின்புறம் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிர்மனுதாரர் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.35 PM)

1. எனது மகள் மதுவந்திஅழைத்ததில் பேரில் தான் ஆஜராகி சாட்சி அளிக்கிறேன். எனது மகளுக்கு பெரியோர்களால் நிச்சயத்திருமணம்தான் நடைபெற்றது. திருமணத்திற்காக எனது மருமகன் வீட்டில் வரதட்சனை எதுவும்

கேட்கவில்லை என்றால் சரிதான். சுமார் 17 பவுன் தங்க நகை எனது மகளுக்கு சீர்வரிசையாக கொடுத்தேன். எனது மருமகன் வீட்டில் எனது மகளுக்க 5 பவுன் போட்டார்கள். நகை எங்களிடம் தான் இருந்தது. அவ்வப்போது தேவைகளுக்காக அடமானம் வைத்து செலவுசெய்துவிட்டோம்.

2. திருமணத்திற்கு பிறகு எனது மகள் எங்களது வீட்டில் 3 மாதம் இருந்தார். எனது மருமகள் கோவையில் வேலையில் இருந்ததால் வாரம் ஒருமுறை வந்து இருந்துவிட்டு செல்வார். மேற்படி 3 மாதக்காலத்தில் எனது மகள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். மேற்படி படித்துவந்த படிப்பை முடித்துவிட்டுதான் எனது மருமகனுடன் எனது மகள் கோவைக்கு தனிக்குடித்தனம் சென்றார்.
3. கோவைக்கு குடித்தனம் சென்ற பிறகு 45 நாட்கள் கழித்து கன்னியாகுமரி பயிற்சிக்கு எனது மருமகன் சென்றதால் எனது மகள் மீண்டும் எனது வீட்டிற்கே வந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மகள் கர்ப்பமாக இருப்பது எங்கள் வீட்டில் இருக்கும்போதுதான் தெரியவந்தது. அதுக்குறித்த தகவலை எனது மகள் தொலைபேசி மூலமாக எனது மருமகனுக்கு தெரிவித்தார்.
4. எனது மகள் கர்ப்பமானதற்கு பின்னிட்டுதான் கோவையில் குடியிருக்கும்போது எனது மகளை அடித்து துன்புறுத்தியதாக எனது மகள் போனில் எனக்கு சொன்னார். நான் நேரில் பார்க்கவில்லை. அதன்பின்னிட்டு நானும் எனது கணவரும் நேரில் சென்று எனது மகளை பார்த்தோம்.
5. எனது மகளுக்கு எனது மருமகன் அடித்ததால் பெரியகாயங்கள் எதுவும் ஏற்படவில்லை. இடுப்பில் வலி இருப்பதாகத்தான் சொன்னார். அதனால் மருத்துவமனைக்கு நாங்கள் அழைத்துச்செல்லவில்லை. அதுக்குறித்து எனது மருமகனிடம் நாங்கள் எதுவும் கேட்கவில்லை. அன்றையதினமே நாங்கள் எங்கள் வீட்டிற்கு திரும்ப வந்துவிட்டோம். நான் சொன்னவாறு உண்மையில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் என் மகள் அவ்வாறுதான் சொன்னார். எனது மகள் இடுப்பை நான்தான் நீவி விட்டுவிட்டு வந்தேன். மேற்படி சம்பவம் நடக்கும்போது எனது மகள் 3 மாதம் கர்ப்பிணியாக இருந்தார்.
6. நான் போய் பார்த்துவிட்டு வந்தபிறகு 3 மாதம் கழித்து தீபாவளிக்காகவும், எனது கொளுந்தனார் மகள் வயதுக்கு வந்துவிட்டபடியாலும், எனது மகளை எனது

மருமகன் எங்களது வீட்டிற்கு அழைத்துவந்தார். தீபாவளி முடிந்து பூப்பு நன்னீராட்டு விழா முடிந்து 10 நாட்கள் கழித்து எனது மருமகன் வந்து மீண்டும் கோவைக்கு அழைத்துச்சென்றார்.

7. எனது மருமகன் அரூரை சேர்ந்தவர். எனது மகளை அரூருக்கு அழைத்துச்செல்வதற்கு மேற்படி தீபாவளிக்கு பின்னிட்டு தை மாதத்தில் பஞ்சாயத்து பேசினார்கள். எனது மருமகன் வீட்டில் அவரது பெற்றோரும், தங்கையும் தங்கையின் கணவரும் வந்தார்கள். எங்களது தரப்பில் என்னுடைய அண்ணன், எனது மச்சாண்டார் 3 நபர்கள், எனது கொளுந்தனார் மற்றும் எனது மாமியார் ஆகியோர் பஞ்சாயத்து பேச வந்திருந்தார்கள்.
8. பஞ்சாயத்து முடிவில் சண்டையாகிவிட்டது. அதன்பின்னிட்டும் எனது மகள் எங்கள் வீட்டில்தான் இருந்தார். 2019 ம் வருடம் எனது மருமகன் எங்களது வீட்டில் வந்து தகராறு செய்ததாக எனது  மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்த வழக்கு நிலுவையில்தான் உள்ளதென்றால் சரிதான். அந்த வழக்கு சம்மந்தப்பட்ட பிரச்சனை நடக்கும்போது கொரோனா காலம் என்றால் சரிதான்.
9. எனது மருமகனுக்கு கேரளாவிற்கு பணிமாறுதல் ஆனப்பிறகு அது மலைப்பகுதி என்பதால் எனது மகள் அங்கு எனது மருமகனுடன் செல்லவில்லை. எனது மருமகன் 07.04.2016 ம் தேதி விவாகரத்து கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்த விவரம் எனக்கு தெரியும். உறவினர்கள் மூலமாக எனது மகள் சேர்ந்துவாழ தயாராக இருப்பதாக சொன்னோம். ஆனால் எனது மருமகன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார். நான் தாக்கல்செய்த பிரமாணபத்திரத்தில் அவ்வாறு உறவினர் மூலம் சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.
10. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நாங்கள் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் சொன்னவாறு உறவினரிடம் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.
11. எனது மருமகன் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே எனது மகளுக்கு குழந்தை பிறந்துவிட்டது. மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து மாவட்ட சமூக நலத்துறைக்கு புகார் அனுப்பபட்டு கடந்த

16.08.2016 ம் தேதி அனுப்பபட்டது. நாங்கள் நேரடியாக சமூக நலத்துறைக்கு புகார் கொடுக்கவில்லை. அவ்வாறுதான் நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளேன்.

12. நான் பிரமாண பத்திரத்தில் பத்தி 13 ல் குறிப்பிட்டுள்ளவாறு குழந்தை பிறந்த பிறகு அரூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சொன்னார்கள். ஆனால் புகார் கொடுக்கவில்லை. பிரமாண பத்திரத்தில் பத்தி 14 ல் குறிப்பிட்டுள்ளவாறு பேட்ரோல் வாகனத்தில் வந்து எனது மருமகன் எனது மகளை அடித்ததை பார்த்தது தொடர்பாக மேச்சேரி காவல் நிலையத்தில் வழக்கு எதுவும் பதிவுசெய்யப்படவில்லை.

13. பிரமாண பத்திரத்தில் பத்தி 14 ல் குறிப்பிட்டுள்ளவாறு மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து எனது மருமகன் விவாகரத்து செய்துக்கொள்வதாகவும், திருமணத்தின் போது போட்ட நகைகளை திரும்ப கொடுத்துவிடுவதாகவும் எழுதிக்கொடுத்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பத்தி 14 ல் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

14. எனது மருமகனுக்கு தற்போது பைல்ஸ் பாதிப்பு இருப்பதாக எனது உறவினர்கள் மூலம் தெரிந்துக்கொண்டேன். எனது மருமகனின் உடல்நிலை பைல்ஸ் மற்றும் சிறுநீரக பாதிப்பால் மோசமாக உள்ளதென்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எனது மருமகன் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் எனதுமகள் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாகத்தான் பதில் தாக்கல் செய்துள்ளோம்.

15. தற்போது எனது மகள் எங்களது சொந்த வீட்டில்தான் உள்ளார். எனது பேரனும் எங்களுடன்தான் இருக்கிறார். எனது மகள் மகளிர் சுயஉதவி குழுவிற்கு கடன் கொடுக்கும் LND என்ற ஒரு தனியார் நிறுவனத்தில் கடன் கொடுப்பது மற்றும் கலெக்சன் செய்யும் வேலை செய்து வருகிறார். அதுப்போக மேட்டுர் அரசினர் மேல்நிலைப்பள்ளி எதிரில் செல்போன் உதிரி பாகங்கள் விற்கும் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான்.

16. எனது மருமகன் என்னிடம் போனில் கெட்டவார்த்தை பேசியதில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் எங்கள் குடும்பத்தில்

உள்ளவர்களை கெட்டவார்த்தையால் திட்டியதாக சொல்லியுள்ளேன். குறிப்பாக என்னை கெட்டவார்த்தையால் திட்டியதாக நான் சொல்லவில்லை. நான் கூறியதுப்போல் எனது மருமகன் எந்தவிதமான வன்கொடுமையும் செய்யவில்லை என்றாலும், எனது மகளுக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.15PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**